


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.05.2023 அன்று தலைமைச் செயலகத்தில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 42 கோடியே 45 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்களுக்கான 21 விடுதிக் கட்டடங்கள், 16 கோடியே 59 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 9 பள்ளிக் கட்டடங்கள் மற்றும் 22 கோடியே 97 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிக் கட்டடங்களை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ.மதிவாணன், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் துணைத் தலைவர் திருமதி செ.கனிமொழி பத்மநாபன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி ஜி.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர், த.ஆனந்த், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழக (தாட்கோ) மேலாண்மை இயக்குநர் கே.எஸ்.கந்தசாமி, பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.05.2023 அன்று தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் 54 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு தொழில்நுட்ப (iTNT) மையத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், மின் ஆளுமை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் தலைமை நிருவாக அலுவலர் பிரவீன் பி. நாயர், தமிழ்நாடு தொழில்நுட்ப மைய (ITNT) தலைமை நிருவாக அலுவலர் விஜய் ஆனந்த் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு

# பூசாரிகள் நலச்சங்கம் நன்றி!

சிவகங்கை, மே.17-

சேலத்தை தலைமையிடமாகக் கொண்ட கோவில் பூசாரிகள் நலச் சங்கம் சிவகங்கை மாவட்டம் சிவகங்கை பெமினா திருமண மண்டபத்தில் பூசாரிகள் 14.5.2023ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 11மணி முதல் 2 மணி வரை நடைபெற்றது.

சங்கத்தின் மாநில தலைவரும் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறையும், கிராம கோவில் பூசாரிகள் ஓய்வூதியத் தேர்வுக் குழு உறுப்பினருமான பி.வாசு பூசாரி இந்த மாநாட்டில் சிறப்புரை ஆற்றினார். ஆர்.சண்முகசுந்தரம் தலைமை ஏற்றார். மாவட்ட தலைவர் எம். திருவள்ளுவர் வரவேற்புரை நிகழ்த்தினார். மாநில செயலாளர் எஸ்.சங்கர், மாநில பொருளார் கே.சுந்தரம் வாழ்த்துரை நிகழ்த்தினார்கள்.

இந்து சமய அறநிலையத் துறை சிறப்பு திட்டங்களை எடுத்துரைத்து நலத்திட்ட விண்ணப்பங்களை வழங்கிய இராமநாதபுரம் மாவட்ட தலைவர் எஸ். இராமமூர்த்தி மற்றும் இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் பஞ்சவர்ணம் பூசாரி திட்டங்களை விளக்கி பேசினார்கள். மேலும் சிவகங்கை மாவட்டச் செயலாளர் எம்.வைரமணி, மாவட்ட துணை தலைவர் எம்.சரவணன் மற்றும் மாவட்டத் துணைச் செயலாளர் எம்.குமார், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எம்.பாண்டி, மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளர் எஸ்.வேலு மற்றும் மாவட்ட ஆலோசனை குழுத் தலைவர் கே. பசும்பொன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மிகச் சிறப்பான முறையில் திராவிட மாடல் அரசை நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மாநாட்டில் நன்றி தெரிவிக்கப்பட்டது. கோவில் பூசாரிகள் நலச் சங்கம் கேட்ட கோரிக்கைகளையும் கேட்க மறந்த பல்வேறு கோரிக்கைகளையும் மனமுவந்து செயல்படுத்தி வரும் முதலமைச்சர் அவர்களுக்கு என்றென்றும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

### தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு!

**கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.**

**சென்னை வடகிழக்கு மாவட்டம்**

**அமைப்பாளர்** - பி.வெங்கடேசன், 144, திருவள்ளுவர் தெரு, சின்ன சேக்காடு, மணலி, சென்னை-600 068.

**துணை அமைப்பாளர்கள்** - பா.பாலஉமாபதி, 71/6, மீனாட்சி நகர், வடக்கு மாட வீதி, திருவொற்றியூர், சென்னை-19., ச. இளஞ்செழியன், 19/88, பேங்க் காலனி, 3வது தெரு, மாதவரம் பால் பண்ணை, சென்னை-51., த. சுதர்சன், 3/9, ரத்தினம் தெரு, சின்னசேக்காடு, மணலி, சென்னை-68., ஏகா.கார்த்திகேயன், 35/40, புதிய காலனி, தாங்கல் திருவொற்றியூர், சென்னை-600019., வேதா. செந்தில்குமார், 3/1119, பாலவேடு காந்தி நகர், பாலவேடு அஞ்சல் - வழி, ஆவடி ஐசிஎப்., சென்னை.

**சென்னை வடக்கு மாவட்டம்**

**அமைப்பாளர்** - மோ. தீனதயாளன், பழைய எண்.19/....., புதிய எண்.18/2, ஆதம் தெரு, இராயபுரம், சென்னை-600013.

**துணை அமைப்பாளர்கள்** - ஜெ.வசந்தகுமார், 89, டி-பிளாக், ரங்கநாதபுரம், கொருக்குப்பேட்டை, சென்னை-600 039., வே.கிருஷ்ணராஜ், 4/18, குமாரசாமி சந்து, இராயபுரம், சென்னை-600 013., இரா.வேதநாயகம், 9, பாலு தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-600 021., கே.ஆனந்த், 89/3, 6வது தெரு, கருணாநிதி சாலை, சர்மா நகர், சென்னை-600 039., கு. சிவதனுஷ், 8/14, காமராஜ் பூங்கா தெரு, இராயபுரம், சென்னை-600 013.

**சென்னை கிழக்கு மாவட்டம்**

**அமைப்பாளர்** - க.வி.நாகவள்ளி பிரபாகரன், 16-டி, ஐசிசி, வடக்கு பிரதான சாலை, அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம், சென்னை-600 101.

**துணை அமைப்பாளர்கள்** - பட்டாளம் ம.செந்தில்குமார், 4/22, தேவராஜ தெரு, பட்டாளம், சென்னை-600 012., விஜய் ராதாகிருஷ்ணன், 10/19, லேகேஷ் எக்கிளேவ், கிளப் சாலை, சேத்துப்பட்டு, சென்னை-600 031., ஜே. ஜாவித்கான், 55/65, ரெங்கதாஸ் காலனி, 3வது தெரு, வில்லிவாக்கம், சென்னை-600 049., ராமாபுரம் வே.ராஜேஷ், 3/87, வள்ளுவர் சாலை, இராமாபுரம், சென்னை-600 089.

**சென்னை தெற்கு மாவட்டம்**

**அமைப்பாளர்** - ஆர். சாம்நவீன், 1/69, ஈஸ்வரன் கோவில் தெரு, மடிப்பாக்கம், சென்னை - 600 021.

துணை அமைப்பாளர்கள் - தே. அறிவுடைநம்பி, 4, ஹரிவரதன் தெரு, சந்தோஷ் நகர், கந்தன்சாவடி, சென்னை-600 096. வெ. தினேஷ், 9, செட்டித் தெரு, போரூர், சென்னை-600 116. வே. சீனிவாசன், 9, கங்கையம்மன்கோவில்தெரு, சீதேவிகுப்பம், வளசரவாக்கம், சென்னை-600 096. நா. சுரேஷ்கண்ணன், 17/4, எம்.ஜி.ஆர்.சாலை, திருவள்ளுவர் நகர், பெருங்குடி, சென்னை-600 096.

**சென்னை மேற்கு மாவட்டம்**

**அமைப்பாளர்** - பா.சுந்தரராமன், டைமண்ட கேட், 37, அபிபுல்லா சாலை, தியாகராயர் நகர், சென்னை - 600 017.

**துணை அமைப்பாளர்கள்** - வீ. ராமகிருஷ்ணன், 8/17, புஷ்பா நகர், நுங்கம்பாக்கம், சென்னை-60017. இரா. குமரேசன், சி-17, திரு.வி.க.காலனி, அண்ணாநகர் கிழக்கு, சென்னை-600102. நே.திருமாறன், 118, முத்தையா தெரு, தேனாம்பேட்டை, சென்னை-600 018.

**சென்னை தென்மேற்கு மாவட்டம்**

**அமைப்பாளர்** - என்.எஸ்.பாலசுப்பிரமணியன், 15/6, தரண்சிங் காலனி, 1வது தெரு, வடபழனி, சென்னை - 600 026.

**துணை அமைப்பாளர்கள்** - மு. வேல்ராஜன், 47/49, அப்துல் அசிஸ் தெரு, 301, ஸ்கந்தா பிளாட்ஸ், தியாகராயர் நகர், சென்னை - 600 017. உ. யுவராஜ், 47/44, கோத்தி கார்டன், 3வது தளம், ராஜ் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-600033. எம்.வடிவேலு, 72/டி, புதிய எண்.1, 57வது தெரு, அசோக் நகர், சென்னை - 600 083. கோ. வெங்கட்ராமன், 316, கணேஷ் அவென்யூ, என்ஜிஓ காலனி, வடபழனி, சென்னை-600026.

**திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்**

**அமைப்பாளர்** - மு. பாஸ்கரன், 16, பஜனை கோவில் தெரு, தம்புரெட்டிபாளையம் தேர் வழி, கும்முடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம்.

**துணை அமைப்பாளர்கள்** - சி. விக்ரமன் 1/14, பெருமாள் கோவில் தெரு, அருமந்தை கூட்டு சாலை, புதூர், சென்னை - 600 067. ஆர். விஜய பிரசாந்த் 27, மேட்டுத் தெரு, சின்ன செங்காத்தகுளம், வடமதுரை, ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் மாவட்டம். ரெ. ராஜாராம், 10, மகாத்மா காந்தி தெரு, தாங்கல் பஞ்செட்டி கிராமம், பொன்னேரி, சென்னை-601 204. ஏ. ரஜினி, 48, பெருமாள் கோவில் தெரு, புதுப்பேடு, மீஞ்சூர் - 601 203. யோகேஷ்வரன் (எ) யோகி, 7, அவ்வையார் தெரு, கே.ஜி.எல்.பிரபு நகர், பிடி ஆபிஸ், மீஞ்சூர் - 601 203.

**திருவள்ளூர் மத்திய மாவட்டம்**

**அமைப்பாளர்** - இ. ஜேக்கப், 101, இ-2, பிளாக், ஸ்ரீபதி நிலையம் அபார்ட்மெண்ட், 85, ஸ்கூல் ரோடு, அயனம்பாக்கம், சென்னை- 600 095.

**துணை அமைப்பாளர்கள்** - தினேஷ் ஆசைதம்பி, 56, இராமானுஜம் 6வது குறுக்கு தெரு, காந்தி நகர், ஆவடி, சென்னை-600 054. இரா. பிரபு, 35, ஆஞ்சநேயர் கோவில் தெரு, பூவிருந்தவல்லி, சென்னை - 600 056. நி. அசோக்குமார், 4, அம்மன் கோவில் தெரு, குமணன்சாவடி, பூவிருந்தவல்லி, சென்னை- 600 056. கோ. அரிகிருஷ்ணன், 1/1, துரோபதியம்மன் கோவில் தெரு, ஓதிக்காடு கிராமம், திருவள்ளூர் - 602 021. வி.பா. அணுவர்ஷினி, 8/1, ஜீவானந்தம் 4வது தெரு, குமரன் நகர், ஆவடி, சென்னை.

**திருவள்ளூர் மேற்கு மாவட்டம்**

**அமைப்பாளர்** - பூண்டி ம.செ.அருண்குமார், 1/8, சக்திகள் தெரு, பூண்டி கிராமம் & அஞ்சல், திருவள்ளூர் மாவட்டம்

**துணை அமைப்பாளர்கள்** - செ.சரத்குமார், 9, நாகலம்மன் கோவில் தெரு, முருகப்பா நகர், திருத்தணி - 631 209. த. சதிஷ், 568, ராதாகிருஷ்ணன் தெரு, பூண்டி, திருவள்ளூர் - 602 203. வா. அருண்குமார், 129, அய்யனார் அவென்யூ, ஆயில்மில், திருவள்ளூர் - 602 023. ரா. சுதர்சன், 19, இராமதண்டலம் கிராமம், புதிய தெரு, மொன்னவேடு அஞ்சல், திருவள்ளூர் மாவட்டம் - 602 020.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18.
நாள்: 14-05-2023

**கார்த்திகேய சிவசேனாபதி**
செயலாளர்
தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

### சென்னை கிழக்கு மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடுவோம்!

### மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, மே.17-

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், 15.05.2023, திங்கள் கிழமை அன்று, சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் உள்ள எம்.கே.டி.மகாலில், அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: ப.தாயகம் கவி, அ.வெற்றிஅழகன், ஜோசப்சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்: கே.எஸ்.ரவிச்சந்திரன். தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, கே.எஸ்.எம். நாதன், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, பரிதிஇளம்சுருதி, மாவட்ட நிர்வாகிகள்: தேவ ஜவஹர், ஜி.மகாதேவன், இசட்.ஆசாத், பகுதிக் கழக செயலாளர்கள்: செ. தமிழ்வேந்தன், எம்.சாமிக் கண்ணு, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், வே. வாசு, கூ.பி. ஜெயின், டி. எஸ்.பி..ராஜகோபால், எம். டி.ஆர். நாகராஜ், சொ. வேலு. வி.சுதாகர், எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி பொதுக் குழு உறுப்பினர்கள்: எஸ். பன்னீர் செல்வம், கோ. மணி, டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், வி. ரமேஷ் (எ) நீலகண்டன், பூர்ணிமா, பி.உதயசங்கர், நிர்மலா தேவி, கலைச் செல்வி, எம்.இப்ராஹிம் கனி, அணிகளின் அமைப்பாளர்கள்: சி.மகேஷ்குமார், டி.லோகேஷ், ஆர்.எஸ்.சித்திக், கே.கோகுல், பா.ஜெகதீஷ், ஜெ.பாலமுருகன், வானவில் விஜய், நா.துலுக்காணம், ஜி.தாமோதரன், எல்.பி.எப்.மோகன், பி.விஜயகுமார், எம்.பெரோஸ் கான், எம்.விநாயகம், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், சாந்தகுமாரி, நாகவள்ளி பிரபாகரன் மற்றும் வட்ட கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் 71'அ' வட்டக் கழக செயலாளர், மா.ருத்ரமூர்த்தி நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

2021 மே 7 முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்று தன் பெயர்ச்சொல்லை புகழ்ச்சொல்லாக்கிய நம் தலைவர் முதல்வராக பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகள் நிறைவேறி மூன்றாம் ஆண்டில் அடி வைக்கும் நாளின் கொண்டாட்டமாகவும். இந்திய ஒன்றியமே வியக்கும் இரண்டு ஆண்டு சாதனைகளையும் குறிப்பாக..

பெண்களுக்கு கட்டணம் இல்லா பேருந்து பயணம், ஆலயங்கள் தோறும் அன்னை தமிழில் வழிபாடு, அனைத்து சாதியினரும் அர்ச்சகராக்கிய சட்ட வரைவு, இல்லம் தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவம், காலை உணவு திட்டம், நான் முதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ் மண்ணிற்கு அதிக தொழில் முதலீடு என நாட்காட்டியில் இருக்கும் நாட்களையெல்லாம் சாதனை நாட்களாக்கிய நம் சரித்திர முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும், அவரின் திராவிட மாடல் ஆட்சியில் மனுநீதி தகர்க்கப்பட்டு மனித நீதியான சமூக நீதியை நிலைநாட்டி இந்திய ஒன்றியத்தின் முதன்மை மாநிலம் ஆக்கிய நம் முதல்வரின் புகழை எடுத்துரைக்கும் வண்ணம் சென்னை கிழக்கு மாவட்டம் முழுவதும் பல்வேறு கூட்டங்களை வெற்றிகரமாக நடந்திட ஒத்துழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு பத்தாண்டு காலமாக முட்டுக்கட்டை போட்ட அ.தி.மு.க. ஆட்சியாளர்களால் கொளத்தூர் தொகுதியில் நிறைவேற்றப்படாமல் இருந்த துணை மின் நிலையம் அமைக்கும் பணியோடு பல திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், கொளத்தூர் வில்லிவாக்கம் தொகுதி மக்களின் பல ஆண்டு கனவான மேம்பாலத்திற்கு நெருக்கடி நிலை காலத்தில், சிறைக் கொட்டடியில் தன்னுயிர் கொடுத்து தலைவர் உயிர் காத்த தியாகத்திருமகன் சிட்டி பாபு அவர்களது பெயரைச் சூட்டி திறந்து வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் மனமார்ந்த நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் தலைமையில் காணொளி காட்சி மூலம் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் வழங்கிய ஆலோசனைப்படி முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை சீரும் சிறப்புமாக கொண்டாடுவதென்றும்.. புதிய உறுப்பினர்களை கழகத்தில் சேர்த்தல் பணியை விரைந்து முடிக்கவும் உறுதியேற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### இராயபுரத்தில் புதிய பள்ளிக் கட்டிடங்கள் திறப்பு!

ஐட்ரீம் ஆர். மூர்த்தி எம்.எல்.ஏ. மாணவர்களுக்கு இனிப்பு வழங்கினார்!

சென்னை, மே 17 -

திராவிட நாயகர், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 12-05- 2023 அன்று இராயபுரம் சட்டமன்ற தொகுதி மணிகண்டன் தெரு /கல்லறை சாலையில், எல்.கே.ஜி. முதல் 10 ஆம் வகுப்புவரை தமிழ் மற்றும் ஆங்கிலம் வழியில் கல்வி கற்க ஏதுவாக ரூ.4.53 கோடி மதிப் பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி பள்ளி கட்டிடத்தை திறந்து வைத்தார்.

மேலும் நேற்று முன்தினம் (15-05-2023) ரூ.7 கோடி மதிப் பீட்டில் சுமார் இருநூறு மாணவியர்கள் தங்க ஏதுவாக அனைத்து வசதிகளுடன் கூடிய புதுப்பொலிவில் "அரசு ஆதி திராவிடர் மாணவியர் விடுதி" இரண்டு கட்டடங்கள் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் இருந்தவாறுக் காணொலி காட்சி மூலமாக திறந்து வைத்து சிறப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, அப்பள்ளி மற்றும் விடுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டு மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கி கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலன் அவர்களுக்கு இராயபுரம் தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வில் இராயபுரம் பகுதிச் செயலாளர்கள் வ. பெ.சுரேஷ், இரா.செந்தில்குமார். பகுதி துணைச் செயலாளர், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்துகொண்டனர்.

### முன்னாள் அமைச்சர் கக்கனின் மகன்

# மருத்துவர் சத்தியநாதன் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மே.17-

முன்னாள் அமைச்சர் கக்கன் அவர்களின் மகன் மருத்துவர் சத்தியநாதன் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தி வருமாறு :-

**தமிழ்நாட்டின் முன்னாள் அமைச்சரும், அப்பழுக்கற்ற பொதுவாழ்க்கைக்கு அடையாளமாகத் திகழ்ந்தவருமான கக்கன் அவர்களது மகன் மருத்துவர் சத்தியநாதன் அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் மனவருத்தம் அடைந்தேன்.**

**அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



சென்னை ராமாபுரத்தில் நடைபெற்று வரும், தலைவர்களின் சிலை வடிவமைக்கும் பணிகளை நேற்று (16.05.2023) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பார்வையிட்டார். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.